# அந்திம காலம் - ஒரு கோட்பாட்டியல் ஆய்வு

*கிருஷ்ணன் மணியம்*

'ஓர் ஊரிலே ஒரு ராசா இருந்தார். அவருக்கு ஒரு ராணி இருந்தார்' என்று தொடங்கும் பாட்டிக்கதையின் பண்பட்ட வழித்தோன்றல் தான் நாவல். கதை கூறும் தோரணையும் தொனியும் ஓரளவு அப்படியே இருந்தாலும், நாவலின் உள்ளடக்கம் பல்வேறு படிநிலைகளைக் கடந்து வந்து விட்டது. ஒரு குறிப்பிட்ட சமூகக் குழு ஓவ்வொரு காலக் கட்டத்திலும் தன் மேல் பூசிக் கொண்ட வர்ணப் பூச்சுக்களைப் பதிவு செய்யும் பிரதியாக விளங்குகிறது நாவல். மேலும் நாவல் தனி மனிதனின் உணர்வு வெளிப்பாட்டினைத் தொகுத்துக் கூறும் ஊடகமாகவும் திகழ்கிறது. இதையே **கைலாசபதி,** (1980, 49)

> 'பல்வேறு வரலாற்றுக் காரணங்களினால் ஒருமைப்பாட்டை இழந்த ஒரு சமூகத்திலே, குடும்பம், சாதி, வாழிடம், மரபுரிமைத் தொழில் முதலியவற்றிலிருந்து விலகியும், விடுபட்டும் வாழ நேரும் மக்களுக்கும், அச்சமூகத்திலே வழி வழி வரும் நம்பிக்கைகள், நியதிகள், சமூக உணர்வுகள் ஆகியவற்றுக்கும் பொருந்தாமை உண்டாகும் பொழுது ஆழமான முரண்பாடுகள் தோன்றுகின்றன. அத்தகைய முரண்பாட்டினை அடிநிலையாகக் கொண்டதே நாவல்'.

என்று குறிப்பிடுகின்றார்.

கைலாசபதியின் கருத்தையொட்டியே ரெ. கார்த்திகேசுவின் **'அந்திம காலம்'** நாவலிலும் மனிதனுக்கும் இயற்கைக்கும் நடக்கும் ஒரு போராட்டம் தான் மையமாக அமையப் பெற்றுள்ளதைக் காண முடிகிறது. அதே வேளையில், இந்நாவல் ஒரு தனி மனிதனின் சமுதாய மதிப்பீடுகளையும் அம்மதிப்பீடுகளில் ஏற்படக்கூடிய முரண்களின் மோதல்களையும் காட்டத் தவறவில்லை. இந்த முரண்களே வாழ்க்கையில் சிக்கல்களாக மாறுகின்றன. வாழ்க்கைச் சிக்கல்களை நாவல்களில் திறம்பட வெளிக்கொண்டு வருவதற்குப் படைப்பாளர்கள் பல்வேறு வகையான உத்திகளைப் பயன்படுத்த வேண்டும். அந்த வகையிலே, இந்நாவலில் ஆசிரியர் பல இலக்கியக் கோட்பாடுகளைக் கொண்டு வாழ்க்கையின் விசாலங்களை அலசி ஆராய்ந்துள்ளார்.

**நாவலாசிரியர் ரெ. கார்த்திகேசு** மலேசிய தமிழ் நாவலுலகிற்கு **'வானத்து வேலிகள்', 'தேடியிருக்கும் தருணங்கள்', 'காதலினால் அல்ல',** என்னும் மற்ற நாவல்களையும் வழங்கியுள்ளார். இந்நாவல்கள் மலேசியத் தமிழ்ச் சமுதாயத்தின் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்த

வேளையில் **'அந்திம காலம்'** மலேசியத் தமிழ் நாவலுலகிற்கு ஒரு புதிய கருப்பொருளைக் கொண்டு வருகின்றது. வேலையிலிருந்து ஓய்வு பெற்ற ஒரு நடுத்தர வர்க்க தமிழ்ச் சமூகத்தின் ஆண், தன்னைத் திடீரென்று 'இயலாமை' பற்றிக் கொண்டதொரு சூழலை எவ்வாறு எதிர்கொள்கிறான் என்பதுடன் அதேவேளையில் தன்னைப் புற்று நோய் பீடித்துள்ளது என்று தெரிந்தவுடன் எவ்வாறு செயல்படுகிறான் என்பதையும் இந்நாவல் விவரிக்கின்றது. இது நாள் வரையில் தன்னுடைய வாழ்க்கையைத் தன் ஆளுமையின் கீழ் வைத்திருந்த நிலை மாறி சிறிய தேவைகளுக்கு கூட மற்றவர்களின் உதவியை நாடி நிற்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்படும் பொழுது ஒருவனுடைய சமுதாய மதிப்பீடுகள் மாற்றம் காணுகின்றன. நாவலின் நாயகனாக வரும் சுந்தரம் என்ற தனி மனிதனின் உணர்வுகளின் குழுமமே இந்நாவல் முழுவதும் வியாபித்துள்ளது. இத்தகைய கதைப்போக்கு மலேசியத் தமிழ் எழுத்துச் சூழலுக்கு முற்றிலும் புதியதொன்றாகும். அதே வேளையில் இது ஒரு புதிய பரிமாணத்தைக் காட்டுகிறது என்று குறிப்பிடுவது பொருத்தமாகும்.

கதையின் கரு, நோயுடன் போராடி தன்னுடைய மன வலிமையால் நோயைத் தோற்கடித்து தன்னுடைய வாழ்க்கையைத் தொடரும் ஒரு நடுத்தர வர்க்கக் குடும்பத்தைச் சார்ந்த ஓய்வு பெற்ற சுந்தரம் என்ற ஆசிரியரைப் பற்றியதாகும். அந்த தனி மனிதன் வாழ்க்கையின் மேல் வைத்திருக்கும் மதிப்பீடுகள், தன்னைச் சார்ந்துள்ள குடும்ப உறுப்பினர்களின் மேல் கொண்டுள்ள அபிப்பிராயங்கள், தான் சார்ந்துள்ள சமுதாயத்தைப் பற்றிய மதிப்புகள், 'இயலாமை' என்ற சூழலுக்கு தள்ளப்பட்ட பின்னர் மற்றவர்களைச் சார்ந்து வாழ வேண்டிய நிலையில் ஏற்படும் உணர்வுகளை எதிர்கொள்ளல் போன்ற நிகழ்வுகளே நாவலை நகர்த்திச் செல்லும் நிகழ்வுக் கோர்வைகளாக அமைகின்றன. இம்மாதிரியான நிகழ்வுகள் தாம் வாழ்க்கையை ஒரு நேர்க்கோட்டு வாழ்க்கையாக இல்லாமல் சிக்கல்கள் நிறைந்தவைகளாகக் காட்டுகின்றன. எனவே, நாவல்களில் காட்டப்படும் இச்சிக்கல்களின் பின்னணியில் வாழ்க்கையைப் புரிந்து கொள்ள முயற்சிக்கின்ற வேளையில் அத்தகைய முயற்சிகளுக்கு இலக்கியக் கோட்பாடுகள் உதவியாக அமைகின்றன.

**மார்க்சியம்**

**'அந்திம காலம்'** நாவலில் வரும் சுந்தரத்தை மையப்படுத்தி மார்க்சியக் கோட்பாட்டு ரீதியில் நோக்கும் பொழுது, மார்க்ஸ் குறிப்பிட்ட '*சமூக இருப்பு சமூக உணர்வைத் தீர்மானிக்கின்றது*' என்ற கருத்து இந்நாவலில் வெளிப்பட்டுள்ளதைக் காண முடிகிறது (இ. எஸ். டி. 1994, 100). இதைக் குறித்து மேலும் விளக்குகையில், **தி. சு. நடராசன்** (1966, 172)

> *'பொருளாதார உற்பத்தியுறவுகளில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு ஏற்ப சமுதாயத்தின் உணர்வு நிலைகளாகிய சித்தாந்தம், சமயம், கலை, இலக்கியம் முதலியவையும் மாறுகின்றன'*

என்று குறிப்பிடுகின்றார். இதிலிருந்து ஒரு தனி மனிதன் தன்னுடைய பொருளாதாரப் பலத்தை வைத்தே தன்னுடைய வாழ்க்கையையும் சிந்தனையும் கட்டமைத்துக் கொள்கிறான் என்று தெரிய வருகிறது. இந்நாவலில் ஒரு சராசரி நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மலேசியத் தமிழ் ஆண் மகன் தான் கொண்ட சமுதாய மதிப்புகளின் அடிப்படையில் தன்னுடைய வாழ்க்கையை

அமைத்து கொள்வதை தெளிவாகக் காட்டியுள்ளார். இதில் வரும் சுந்தரம் ஓரளவு பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டு தனக்கென்று ஒரு வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுத்துத், தனக்கு ஏற்ற வகையில் தொழிலையும் தேர்தெடுத்துத், தனக்கு ஒத்துப் போகும் நண்பனைத் தேர்ந்தெடுத்து, ஒரு வட்டம் அமைத்துச் சமுதாயத்தின் அடித்தள மக்களான உழைக்கும் வர்க்கத்தினரிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டு வாழும் ஒரு முதலாளித்துவ 'பூர்ஷவா' வாழ்க்கையே வாழ்ந்து வருகிறார். இத்தகைய வாழ்க்கை முறையானது மலேசியத் தமிழ்ச் சமுதாயத்தின் நடுத்தர வர்க்கத்தினரின் சுயநலம் மிகுந்த இயல்பான ஒரு வாழ்க்கைப் போக்கு என்று கூறலாம். ஒவ்வொரு சூழலிலும் தன்னுடைய செயல்களைச் சமூகத்தின் மற்ற உறுப்பினர்கள் மதிக்க வேண்டும், போற்ற வேண்டும் என்றும் அதனை மீறி அதற்கு மாற்று கருத்துகளோ, நிகழ்வுகளோ இருக்குமாயின் தன்னை அச்செயல்களிலிருந்து விடுவித்துத் தான் ஒதுங்கி கொள்ளும் செயல்பாடுகளைக் கொண்டிருத்தல்; மேலும் தன்னுடைய மகனும் மகளும் எப்பொழுதும் தன்னுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்; மனைவியோ தன்னுடைய தேவைகளை முறையாகப் பூர்த்திச் செய்வதற்காக எப்பொழுதும் உடனிருந்து சேவையை வழங்கிக் கொண்டிருக்க வேண்டும் முதலான சிந்தனைகளே மார்க்சியம் சுட்டிக் காட்டும் நடுத்தர வர்க்கத்தின் சிந்தனையாகும். இத்தகைய சிந்தனையையே சுந்தரத்தின் வாயிலாக மலேசியத் தமிழ்ச் சமுதாயத்தின் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஓர் ஆணின் சிந்தனையாகவும், சமூக மதிப்புகளாகவும் உள்ளதை இந்நாவலில் நாவலாசிரியர் தெளிவாகக் காட்டுகிறார். இதிலிருந்து பொருளாதாரத்தில் ஓரளவு பலம் பெற்றவுடன் அடித்தள மக்களிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டு ஒரு வட்டத்திற்குள் தன்னுடைய வாழ்க்கையைச் சுருக்கிக் கொள்ளும் நடுத்தர வர்க்கத்தினரின் சுயநலப் போக்குகளைத் தெளிவாக உணர முடியும். இத்தகைய போக்கு முன்னேறத் துடிக்கும் ஒரு சமுதாயத்திற்குப் பயனாக அமையாது. ஒரு சமுதாயத்தில் உருவாகுகின்ற ஏற்ற தாழ்வு இடைவெளியைக் குறைப்பதற்கு நடுத்தர வர்க்கத்தின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். ஆனால், சமுதாயத்தில் ஒரு குறுகிய வட்டத்திற்குள் சுயநலத்துடன் தன்னுடைய வாழ்க்கையைச் சுருக்கிக் கொள்ளும் சுந்தரம் போன்றோரே மிகுதியாக உள்ளனர்.

## இருத்தலியல்

மேற்குறிப்பிட்ட வண்ணம் இறுக்கத் தன்மையுடன் அமைந்த வாழ்க்கை, தன்னுடைய ஆளுமையையும் மீறி நிலை குலையும் போதுதான் இனி வாழ்க்கையின் இயக்கம் தன்னுடைய கட்டுப்பாட்டில் இல்லை என்ற உண்மையை ஒவ்வொரு தனி மனிதனும் உணர தலைப்படுகிறான். உண்மையான வாழ்க்கையில் தன்னுடைய அதிகாரத்துவ வட்டத்தையும் தாண்டி நிகழ்வுகள் நடைபெறுகின்ற பொழுது நிலையான கட்டமைக்கப்பட்ட வாழ்வு என்பது ஒரு மாயை என்று வாழ்க்கையின் சாரத்தை உணரும் நிலைக்கு மனிதன் தள்ளப்படுகிறான். இப்பொழுது வாழ்க்கையின் புதியதொரு பரிமாணத்தைத் தரிசிக்கும் மனிதன் 'நிலையமை' என்ற தத்துவத்தைப் புரிந்து கொள்ள முயற்சிக்கின்றான். பின்னை நவீனத்துவக் கோட்பாட்டில் '*எக்ஸிஸ்டென்சியலிசம்*' என்ற 'இருத்தலியல்' கோட்பாட்டினை விளக்குகின்ற வேளையில்,

> 'ஒவ்வொரு மணித் துளியிலும் மனித வாழ்வு கணக்கிடப்படுகிறது. மேலும் அந்த அந்த கணத்தில் இருக்கின்ற வாழ்க்கை தான் உண்மையான

வாழ்க்கை. இதில் அடுத்த மணித்துளிகளில் நடைபெற வேண்டிய காரியம் எந்த மனிதனின் பொறுப்பிலும் இல்லை'.

(எஸ். வி. ராஜதுரை, 1983, 19)

என்று கூறுவர். அவ்வகையில், புற்றுநோய் கண்டு விட்ட சுந்தரம் தன்னுடைய வாழ்க்கையை அவ்வாறே நடத்திச் செல்கிறார். தன்னுடைய ஒவ்வொரு மணித்துளி வாழ்க்கையிலும் ஓர் அர்த்தம் உள்ளதாக உணர்கிறார். தன்னுடைய கடந்த கால வாழ்க்கை நிகழ்வுகளை எண்ணிப் பார்த்து அந்தக் கணங்களின் மகிழ்ச்சியைத் தன்னுடைய பேரனுடன் பகிர்ந்து கொண்டு அனுபவிக்கின்றார். இவ்வுலகில் தன்னுடைய காலம் சுருங்கி விட்டது என்று தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டு தன்னுடைய தன்மானத்திற்குச் சவாலாக விளங்குகின்ற சூழலிலும் அமைதியைக் கடைப்பிடிக்கும் போக்கினைப் பின்பற்றும் மனிதராக மாறிப் போகிறார். இருப்பினும் அவருக்குள்ளே தான் சாகக் கூடாது, சாவை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற மன உறுதியும் உள்ளதைப் புரிந்து கொள்ள முடிகிறது. இம்மாதிரியான போக்கினை **கீர்க்கெகார்ட்** என்ற ஆய்வாளர்,

'இருத்தல் என்பது மனிதனின் அனுபவரீதியான வாழ்விலிருந்து மாறுப்பட்டது. இன்னும் கை கூடிவராத ஓர் உள் மன வாழ்வே அது. தனி மனிதன் தனது சுதந்திரமான தேர்வுச் செயல் மூலம் அடையப் பெருகின்ற நிலையே அது. மிக நெருக்கடியான தருணங்களால் ஒளியூட்டப்படுகின்ற ஒன்று. புலன் உணர்வுகளால் புரிந்து கொள்ளப்பட முடியாத அறிவின் விளக்கத்துக்கு உட்படாத ஒன்று'

என்று தனது கருத்தினை முன் வைக்கின்றார் **(எஸ். வி. ராஜதுரை, 1983, 124)**. சுந்தரமும் தனது வாழ்க்கைச் சவால்களை எண்ணிப் பார்க்கும் பொழுது அவரது நினைவுக் குமிழிகள் பின் வருமாறு முகிழ்க்கின்றன,

"நேற்றிரவின் பயங்களும், அழுகையும், ஜானகியுடனான உரையாடலும் தேவையில்லாதவை போன்று தோன்றின. அவை பொய் என்றும் இந்தக் கணந்தான் நிஜம் என்றும் தோன்றியது. இந்தக் கணத்தில் உண்மை இருக்கிறது. இந்தக் காற்றில் ஜீவன் இருக்கிறது. மேலே சின்ன நட்சத்திரங்களுடன் தெளிந்த வானம். கீழே உறுதியான பூமி. அதிலே நேராக நிற்கின்ற என் கால்கள். இந்த உண்மைகள் நெஞ்சுக்கு இதமாக இருந்தன. நம்பிக்கை ஊட்டின. தனக்காகக் காத்திருக்கும் சாவை எண்ணிச் சிரித்தார்..."

இந்த வரிகள் சாவின் விளிம்பில் நிற்கும் ஒருவர் அச்சாவல்களை எதிர்நோக்கும் வேட்கையோடு தன்னுடைய எதிர்கால வாழ்க்கையைத் தொடரும் ஒரு நம்பிக்கையான சூழலைக் காட்டுகின்றது. இக்கட்டான நிலைகளில் மனிதன் நல்ல முடிவுகளை எடுக்கின்ற வாய்ப்புகள் அதிகம் உள்ளதை இது உறுதிப்படுத்துகின்றது. இருத்தலியல் கோட்பாடு மனிதனின் ஒவ்வொரு மணித்துளியும் எத்தகைய மகத்தான தருணங்கள் என்பதைத் தெளிவுப்படுத்துகிறது.

**சர்ரியலிஸம்**

மனிதனின் வாழ்க்கையில் எந்த அளவிற்கு யதார்த்தம் வெளிப்படுகிறதோ அந்த அளவிற்கு பொய்மையும் கலந்துள்ளது என்பது மறுக்கவியலாது. மற்றவர்களின் மனதிற்கு இதமும் இன்பமும் அளிக்க வேண்டும் என்ற எண்ணத்திலே அவர்களின் எண்ணப்படியே பல சூழல்களில் தம்முடைய மனசாட்சிக்கெதிராக நடந்து கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக நேரிடுகிறது. இச்சூழலைத்தான் இலக்கியத்திலே '**சர்ரியலிஸம்**' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் விளக்குவர். இதைக் குறித்து **பாலா (1977, 26),**

> "தன்னுடைய சிந்தனை, செயல்கள், வாழ்க்கை - இவை எல்லாவற்றிற்கும் மூலாதாரமாக அவன் உணரும் உலகு ஒன்றிற்கும், அறிவியக்கம் சுட்டும் உலகு ஒன்றிற்கும் இடையே மனிதன் தடுமாறுகிறான்"

என்று கூறுகிறார். மனிதன் தன்னுடைய அறிவின் அடிப்படையில் செயல்படும் சூழலில் தன்னுடைய உண்மையான உணர்வுகளைக் காட்டிக் கொள்ளாமலே தான் செயல்பட வேண்டியுள்ளது. இம்மாதிரியான உணர்வுகளை 'நனவோடை' உத்தியின் மூலம் தன்னுடைய பாத்திரங்களின் வழி படைப்பாளர்கள் வெளிப்படுத்த முடியும். அவ்வகையிலே, கார்த்திகேசு சுந்தரத்தின் வாயிலாக அப்பாத்திரத்தின் உண்மையான உணர்வுகளை நன்கு வெளிப் படுத்தியுள்ளார். மரபு ரீதியாக கட்டமைக்கப்பட்ட மதிப்புகளை சுமந்து கொண்டுள்ள நாம் ஒரு வகையான போலி வாழ்க்கையைத்தான் மேற்கொண்டுள்ளோம். நம்முடைய உண்மையான உணர்வுகள் நம்முடைய மனத்தின் ஆழத்திலேயே புதைந்து ஆழ்மன உணர்வுகளாக மாறிப் போகின்றன. இந்நாவலிலே சுந்தரம், தான் நோயுற்ற போதும் தனது மனைவியின் ஆழுமையின் கீழ் இருக்க விரும்பவில்லை. இதை,

> "அவளுடைய அணைப்பு அன்பு அணைப்பே ஆனாலும் அதற்குள் கட்டுண்டு தன் நடமாட்டச் சுதந்திரத்தை விட்டுக் கொடுத்து விடுவதில் கௌரவதில்லை எனத் தனக்குள் எண்ணிக் கொண்டார்"

என்ற சுந்தரத்தின் எண்ணங்களின் வழி சுந்தரம் அவருடைய மனைவியின் மேல் காட்டும் அந்தக் கட்டத்திலே ஒரு கட்டாயத்தின் பேரில் காட்டும் அன்பு தான் என்று அறிய முடிகிறது. இதன் வழி, இயலாமை வந்து பீடித்த பிறகும் ஓர் ஆணின் ஆதிக்கத்தன்மை அவனை விட்டுப் போகாது என்பதற்கு இது சிறந்த உதாரணமாகும். உண்மையில் சுந்தரம் அவருடைய மனைவியின்பால் மிகுந்த அன்பு கொண்டவராகவே நடந்து கொள்கிறார். தன்னுடைய அன்பால் அவருடைய மனைவியின் எல்லாப் பணிவிடைகளையும் அங்கீகரித்து ஏற்றுக் கொள்கிறார். ஆனால், தன்னுடைய உண்மையான உள்ளக்கிடக்கையை மனைவி ஜானகிக்கு தெரியாமலேயே மறைத்து விடுகிறார். இதன் வழி, ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையைப் போலியானதொன்றாகவே வைத்துள்ளனர் என்று அறிய முடிகிறது.

இதைத் தவிர்த்து, தனக்குச் சிகிச்சையளிக்கப் போகும் மருத்துவர் ரம்லி, ஒரு காலத்தில் தனக்கு மாணவராக இருந்தபோது பள்ளியில் ரம்லி புரிந்த தவறான செயலினால் தன்னால் தண்டனைப் பெற்றவர் என்று தெரிய வருகின்றபோது சுந்தரம் மன உளைச்சலுக்கு ஆளாகிறார். மாணவ காலத்தில் தன்னிடம் தண்டனைப் பெற்றதை நினைவு கூர்ந்து இந்தச்

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தன்னைப் பழி தீர்க்கும் வகையில் கொன்று விடுவாரோ என்ற நினைப்பு அவருக்கு வருகின்றது. இதை,

> *"டாக்டர் ரம்லி - என் பழைய மாணவர் - என் பழைய மாணவர் - என் பழைய பகைவர் - எனக்கு சிகிச்சை ஆரம்பிக்க போகிறார். சிகிச்சையா அல்லது மெதுவான வெளியே தெரிந்து கொள்ள முடியாத கொலையா?"*

என்ற சுந்தரத்தின் வரிகளின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இந்த எண்ணம் ஏற்பட்டப் பின்னர் சுந்தரத்திற்கு மருத்துவர் மேல் அவநம்பிக்கை ஏற்படுகின்றது. இருப்பினும் மருத்துவரிடமும் மற்றவர்களிடமும் இயல்பாகவே நடந்து கொள்ள முயல்கிறார். **'சர்ரியலிஸம்'** உத்தியிலே சொல்லப்படுவது போல முழுமையாக நம்ப வேண்டிய மருத்துவரைச் சந்தேகிக்கின்ற நிலையில் தான் இருப்பதை வெளிப்படுத்தாமல் இயல்பாக இருக்க முயல்கிறார். ஆனால், தன்னுடைய ஆளுமையையும் மீறி தன்னுடைய நெருங்கிய நண்பரான ராமாவிடமும், தன்னிடம் மிகவும் பரிவு காட்டும் மாதர் மேகியிடமும் தன்னுடைய அந்தரங்கமான எண்ணங்களை வெளிப்படுத்துகிறார். இத்தகைய உத்தி முறை சுந்தரத்தின் பாத்திரத்திற்கு மேலும் வலுவூட்டி அப்பாத்திரத்தின் நம்பகத்தன்மையைக் கூட்டுகின்றது.

## தொன்மங்களும் படிமங்களும்

தொன்மங்களையும் படிமங்களையும் கட்டியெழுப்புவது என்பது இன்றைய பின்னை நவீனத்துவ இலக்கிய கோட்பாடுகளில் ஒரு கூறாக விளங்குகிறது. தொன்மங்களும் படிமங்களும் தமிழ் இலக்கியங்களில் படைப்பாளர்களால் தொன்று தொட்டுப் பயன்படுத்தப் பட்டு வருவதைக் காணமுடிகிறது. தொன்மங்களும் படிமங்களும் புராணங்களைக் காணப் பரம்பரைக் கதைகளாகக் கேட்டு வந்த காரணங்களினால் மக்களுடைய மனதிலே ஆழப் பதிந்து விட்டது. தொன்மத்தைப் பற்றி **கதிர். மகாதேவன் (1989, 7)** குறிப்பிடுகையில்,

> *"தொன்மம் என்பது கூட்டுக் கற்பனையின் விளைவாகும்; அதில் அறிவியல் ஆய்விற்கோ, பகுத்தறிவின் பகுப்பிற்கோ இடமில்லை. தொன்மங்கள் பல ஆண்டுகள் பயின்று வரினும் பலரால் புடம் போட்டுத் தூய்மை படுத்தப்படினும் இன்றுவரை பலோரின் சக்தி வாய்ந்த கூட்டுக் கற்பனையால் வளர்ச்சி அடைந்திருப்பதைக் காண்கிறோம். தொன்மம் எனும் பழங்கதையைப் பற்றி ஆய்வதே மன மகிழ்ச்சியை உணர்ச்சியோடு கிளரக்கூடிய அனுபவமாகும்"*

என்று குறிப்பிடுவதின் மூலம் தமிழ்ச் சமூகத்திலே தொன்மங்கள் எத்தகைய செல்வாக்கினைப் பெற்றுள்ளன என்பதை உணர முடிகின்றது. அவ்வகையில் **'அந்திம காலம்'** நாவல் பல்வேறு நிலைகளில் தொன்மங்களையும் படிமங்களையும் தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்வியலையொட்டி வெளிப்படுத்தியுள்ளதைக் காண முடிகின்றது. 'விதியை நம்புவது' மற்றும் 'கடவுளின் தீர்ப்பு' என்பது தமிழ்ச் சமுதாயத்தின் உறுதியான நம்பிக்கைகளாகும். இந்த நம்பிக்கைகளே இந்த நாவலின் அடிக்கருத்துக்களைத் தாங்கி நிற்கக் கூடியவையாக இருக்கின்றன.

'பரவால்ல விட்டுத் தள்ளு ஜானகி! அறிலும் சாவு, நூறிலும் சாவு! அழாதே அக்கா! அழாதே ஜானகி! நான் இருக்கேன்! தெய்வம் விட்டபடி நடக்கட்டும்''

என்ற வரிகள் தெய்வத்திடம் சுந்தரம் வைத்திருந்த நம்பிக்கையைத் தெளிவுபடுத்துகிறது. தெய்வம் தான் மக்களின் நன்மை தீமைகளையும், வாழ்க்கையையும் தீர்மானிக்கும் பொறுப்பினை ஏற்றுள்ளது என்ற தமிழர்களின் வாழ்வியல் கொள்கையைச் சுந்தரம் ஏற்றுக் கொண்டிருந்தாலும், சடங்குகளில் நம்பிக்கைக் கொண்டவராக அவர் இல்லை. மாறாக, 'கடமையைச் செய், பலனை எதிர்பார்க்காதே' என்ற கொள்கைக்கு ஏற்ப தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டவராக இருக்கிறார்.

இதைத் தவிர்த்து, புராணக் கதைகளையும் படிம நிலைகளில் உயர்த்திப் பேசப்படக் கூடிய பாத்திரங்களையும் இந்நாவலாசிரியர் பயன்படுத்தியுள்ளார். இத்தகைய உத்திமுறைகள் மலேசியப் படைப்புலகிற்குப் புதிய வரவுகளாகும்.

"கவலைப் படாதீங்க. இனிமே சாவப் பத்தி பேசாதீங்க. நான் சாவித்திரி மாதிரி. யமன் கிட்ட இருந்து உங்கள மீட்டுக் கொண்டாறேன்"

என்ற ஜானகியின் கூற்று, புராணக் கதையான 'சத்தியவான் சாவித்திரி'யில் சாவித்திரியின் பாத்திரத்தை நினைவிற்குக் கொண்டு வருகிறது. புராணக் கதையிலே எவ்வாறு சாவித்திரி எமனை எமனுடைய வரத்தைக் கொண்டே தன்னுடைய கணவனுடைய உயிரை மீட்டு வருகிறாளோ, அதைப் போன்றே தானும் செய்யப் போவதாக ஜானகி கூறுகிறாள். இவ்வாறான தொன்மங்களும் படிமங்களும் படைக்கப்படும் பொழுது தமிழ் இலக்கியங்களின் வளமும் செழுமையும் வாசகரிடம் சென்று சேர்கின்றன. வாசகர்களுக்குச் சொல்லப்பட்டுள்ள தொன்மங்கள் அறிமுகமாகும் அதே வேளையில் அவற்றின் மூல படிவத்தைத் தேடிப் படிக்க வைக்க இதுவே தூண்டுகோலாகவும் அமையும். மேலும், தொன்மக் கூறுகளும் படிமங்களும் புதிய தலைமுறையினருக்குத் தமிழ்ச் சமுதாயத்தின் வழமைகளையும் நம்பிக்கைகளையும் தெளிவுப் படுத்துவதோடு இச்சமூகம் தன்னுடைய தடத்திலிருந்து புரளாமல் பண்பாட்டுச் செறிவுகளைப் பாதுகாக்கவும் இவை உதவுகின்றன என்றால் மிகையாகாது.

### பெண்ணியம்

தமிழ்ச் சூழலுக்கென்றே மரபு ரீதியாகக் கட்டமைக்கப்பட்ட பெண்ணியக் கூறுகள் இச்சமுகத்தில் ஆழப் பதிந்துள்ளன. இது இலக்கியங்களிலும் பிரதிபலிக்கின்றன என்பதை மறுக்கவியலாது. இத்தகைய கட்டமைப்பானது பெண்ணின் கடமைகளை வரையறுத்துக் கூறுவதுடன் அவள் அவற்றை தவறாது கடைப்பிடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

"திருமணமாகிக் கணவன் வீட்டிற்குச் செல்லும் பெண், தன் கணவனின் குறிப்பறிந்து செயல்பட்டு, நாணம், அழகு, அன்பு, விருந்துபசரித்தல், பிறன் ஒருவனை ஏறெடுத்தும் நோக்காத கற்பு ஆகிய பண்புகளைக் கொண்டவளாய், கணவன் விருப்பத்திற்கேற்பக் குழந்தைகளைப் பெற்றெடுத்து, இல்லத்தின் எல்லை கடவாமல், கணவனது பேச்சிற்கு

> *எதிர்பேச்சு பேசாமல், சிறந்த இல்லத் தலைவியாகத் திகழ வேண்டும் என்ற பெண்மைக் கருத்தாக்கப் புனைவைத் தொல்காப்பியம் தொடங்கி இன்று வரை காண முடிகிறது"*

என்று **தேவதத்தாவும் கமலியும் (1995, 31)** குறிப்பிடுவதிலிருந்து தமிழ்ச் சமூகத்தில் பெண் பற்றிய மதிப்பீடுகள் மாறாமல் நிலைத்திருப்பதை உணர முடிகிறது. அந்த வகையிலே, **"அந்திம காலம்"** நாவலிலும் இம்மரபு ரீதியிலான பார்வை பேசப்பட்டுள்ளது. ஆனால், புதிய பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் புதிய தலைமுறையினர் வாயிலாக நாவலாசிரியர் பெண்ணியச் சிந்தனைகளை தூவ முற்பட்டிருந்தாலும் சமூகத்தின் மரபு வழிப் பண்பாட்டிலிருந்து விலகி விடாமல் வெகு கவனமாகவே தனது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். ஜானகி மற்றும் அத்தை பாத்திரங்களின் வழி மரபு ரீதியிலான பெண்மைக் குணநலன்களைப் படைத்த ஆசிரியர், அன்னம் மற்றும் ராதா பாத்திரங்களின் வழி இன்றைய மாறிவரும் சூழலில் பெண் புதிய சிந்தனைகளுக்கும் இடமளிக்கிறாள் என்பதைக் கூற முயன்றுள்ளார்.

அன்னம் என்ற பாத்திரம் திருமண பந்தத்தில் தன்னை இணைத்துக் கொள்ளவில்லை. அதே வேளையில் அவளுடைய வாழ்க்கையைப் பற்றிய முடிவுகளை எடுப்பதற்கும் அவள் பிறருக்கு அனுமதி வழங்கவும் இல்லை. இப்பாத்திரம் யாருடைய ஆதிக்கமும் இல்லாமல் தன்னுடைய முடிவினை தானே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையைப் பெற்ற பாத்திரமாகவே விளங்குகிறது. ஆனால், அன்னம் பாத்திரம் புராண காலத்துப் பாத்திரமான 'திலகவதியார்' போன்ற பாத்திரமாகத்தான் படைக்கப்பட்டுள்ளதே தவிர புதிய நோக்கிலே இப்பாத்திரத்தின் வழி எவ்வித செய்திகளையும் ஆசிரியர் வெளிப்படுத்தவில்லை. ஆனால், ராதா என்ற பாத்திரத்தின் வழி இன்றைய மலேசிய நடுத்தரக் குடும்பங்களில் முற்போக்குச் சிந்தனைகள் என்று கூறிக் கொண்டு புதிய தலைமுறையினர் சிலர் அவசரமாக முடிவுகளை தாங்களே சுயமாக எடுத்துக் கொள்வதுடன் தங்களுடைய வாழ்க்கையையும் அலங்கோலமாக்கிக் கொள்வதை ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். ராதா காதலித்து திருமணம் செய்து கொள்கிறாள். ஒரு குழந்தைப் பிறந்த பிறகு கணவன் மனைவி இருவரும் தங்களிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளால் பிரிந்து விடுகின்றனர். இச்சமூகத்தில் திருமணம் என்ற கட்டுக்குள்ளிருந்து பெண் வெளியேறுவது என்பது மரபை மீறுகின்ற செயலாக கருதப்பட்ட போதிலும் ராதா மிகவும் முற்போக்குச் சிந்தனையுடன் தன்னுடைய மேலை நாட்டு நண்பனுடன் புதிய வாழ்க்கையை மேற்கொள்ள ஐரோப்பா சென்று விடுகிறாள். குழந்தை, தாத்தா பாட்டியிடம் விடப்படுகிறது. பெண் இப்படித் துணிவாக முடிவெடுப்பது என்பது மிகவும் அரிதாக நடைமுறை வாழ்க்கையில் இருந்தாலும் இலக்கியங்களில் இடம் பெறுவது என்பது மிகக் குறைவேயாகும். இந்நாவலில் இம்மாதிரியான நிகழ்வினை இடம் பெறச் செய்வதின் வழி பெண் என்பவள் எப்பொழுதும் அடங்கியே போக வேண்டும் என்ற நிலையில் இருந்து மாறுபட்டு தன்னுடைய வாழ்க்கையைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் சுதந்திரத்தை பெற வேண்டிய அவசியத்தை உணர்த்தும் கருத்தினை விளக்குவதாக அமைகிறது. ஆனால், சமுதாய ரீதியில் இத்தகைய போக்குகள் பண்பாட்டுச் சிதைவுகளுக்கு வழி கோலும் என்ற சீரிய நோக்கத்திலே ஆசிரியர், ராதாவின் புதிய வாழ்க்கையை வெற்றியடையச் செய்யாமல், அவளுடைய குழந்தையின் பொருட்டுத் தன்னுடைய பழைய கணவனிடமே வந்து சேர்வதாகவும், அவளுடைய கணவனும் தன் தவற்றை உணர்ந்து அவளை முழு மனதுடன்

ஏற்றுக் கொள்வதாகவும் நிகழ்வுகளைப் படைத்துள்ளார். அதே வேளையில், இத்தகைய நிகழ்வுகளின் வழி மலேசியத் தமிழ்ச் சமூகத்திலே பெண்களுக்கும், பெண்மைக்கும் உரிய உரிமையை வழங்குதல் அவசியம்; இல்லையேல் இதுவே குடும்ப சிதைவுகளுக்கு முக்கியக் காரணங்களாக அமைந்து விடும் என்பதையே ஆசிரியர் இந்நாவலின் வழி வலியுறுத்துகிறார். பெண்ணியச் சிந்தனைகளும் மலேசியத் தமிழ் இலக்கிய உலகில் வேர் விடத் தொடங்கி விட்டது என்பதற்குச் சான்றாக அமைகிறது **'அந்திம காலம்'**.

முடிவுரை

உண்மையில், மலேசியத் தமிழ் நாவல்கள் கோட்பாடுகளின் சிந்தனைகளோடு படைக்கப்படுவது என்பது மிகவும் குறைந்த எண்ணிக்கையில் மட்டுமேயாகும். ஆனால், இங்குப் படைக்கப்படுகின்ற பெரும்பாலான நாவல்களில் கோட்பாட்டுச் சிந்தனைகள் இயைந்து வருவதை மறுக்கவியலாது. அவ்வகையிலே, **ரெ. கார்த்திகேசுவின் 'அந்திம காலம்'** என்ற நாவலிலும் கோட்பாடுகள் இயைந்து வந்துள்ளதைத் திறனாய்வின் வழி அறிய முடிகின்றது. இதைத் தவிர்த்து, கோட்பாடுகளைத் தழுவிய நாவல்கள் மலேசியத் தமிழ் இலக்கிய உலகில் இடம் பெறுதல் வேண்டும். அப்பொழுதுதான் ஏனைய தமிழ் இலக்கிய உலகுடன் மலேசிய தமிழ் இலக்கிய உலகமும் இணையானதொரு வளர்ச்சியினைக் காண முடியும். அதே வேளையில், இம்மாதிரியான முயற்சிகள் மலேசியத் தமிழ் இலக்கியத்தினை ஒரு தளத்திலிருந்து இன்னொரு தளத்திற்குக் கொண்டு செல்ல வழி கோலும் என்பது திண்ணம்.

## துணைமை நூல்கள்


1. இ. எஸ். டி. (தொகுப்பு), (1994). **இலக்கிய இஸங்கள்**, சிவகங்கை, அன்னம் (பி) லிட்
2. கார்த்திகேசு. ரெ., (1999). **அந்திம காலம்**, பத்துகேவ், முகில் பதிப்பகம்
3. கைலாசபதி. க., (1987). **தமிழ் நாவல் இலக்கியம் (திறனாய்வு கட்டுரைகள்)**, சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
4. கைலாசபதி. க., (1980). **நவீன இலக்கியத்தின் அடிப்படைகள்**, சென்னை, மக்கள் வெளியீடு
5. சிவத்தம்பி. கார்த்திகேசு, (1978). **நாவலும் வாழ்க்கையும்**, சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
6. தேவதத்தா, கமலி, (1995). **பெண்மை, போலிப்புனைவு, எதிர்வினைவு**, கொடைக்கானல், தமிழ்த்துறை, அன்னை தெரேசா மகளிர் பல்கலைக்கழகம்.
7. நடராசன். தி. சு., (1996). **திறனாய்வுக்கலை**, சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
8. நார்த்ராப் ஃப்ரை, (1988). **இலக்கியத்தில் தொல்படிவங்கள்**, சிவகங்கை, அன்னம் (பி) லிட்
9. பாலா, **சர்ரியலிஸம்**, (1997). சிவகங்கை, அன்னம் (பி) லிட்
10. மகாதேவன். கதிர்., (1989). **தொன்மம்**, மதுரை, இலட்சுமி வெளியீடு
11. ராஜதுரை, எஸ். வி., (1983). **எக்சிஸ்டென்ஷியலிசம்**, சென்னை, க்ரியா பதிப்பகம்